# அறிமுகம்

***1. நாடும் மக்களும்.***—நாம் இப்பொழுது ஆராயவிருக்கும் வரலாறானது, பதினைந்து நூற்றாண்டுகளினூடாக முற்பிதாக்கள், பழைய உடன்படிக்கையின் அரசர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருடன் பழக்கத்தையும் பரிசுத்தத்தையும் சற்றுக் காலம் நமக்குள் வேரூன்றிய வகையில் நம்மைக் காத்திருக்கும். இயற்கையான காட்சியானது சீகேமில் ஆபிரகாம் தமது கூடாரத்தை முதன் முதலாக அமைத்த போதிருந்தவாறே உள்ளது; மற்ற யாவும் மாற்றப்பட்டுள்ளது. பழங்கால மக்களும் நகரங்களும் கண் மறைவாய் மறைந்து போயினர் அல்லது வீழ்ந்து போயின; புதிய மக்களும் நகரங்களும் முன்னணிக்கு வந்துள்ளன(ர்). கானான் நாடு என்பது பெலிஸ்தர் என்பதிலிருந்து பெறப்பட்ட பாலஸ்தீனம் என்று ஆகியிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினங்களின் பெயர்கள் அவர்களின் இன வாழ்வின் மாறுபடும் நிலைகளும் மாறுபட்டுக் கொண்டுள்ளன. தொடக்க காலப் பெயரான எபிரெயர்கள் என்பது நிகழ் காலத்தில் அவர்களுக் கிடையில் ஒட்டிக் கொண்டுள்ளது. யாக்கோபின் காலத்திலிருந்தே பயன் படுத்தப்பட்டிருந்த இஸ்ரவேல் என்ற சொற்றொடரானது ரெகொபெயா மின் கீழ் பிரிவினை ஏற்பட்ட பிறகு வடக்கு இராஜ்யத்துக்கே ஏற்புடைய தாயிற்று; யூதா என்பதிலிருந்து வந்த யூதர் என்ற சொற்றொடரானது பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு காலம் முழுவதிலும் பொதுவான இனப்பெயராக இருந்தது. இனமானது முற்காலங்களில் இருந்தது போலத் தனிமைப்பட்டிருக்கவில்லை. வாழ்வு சிக்கலானதாக வளர்ந்துள்ளது. அதற்குள் பல புது அலைகள் பெருக்கெடுத்து வந்துள்ளன. ஒரு ரோம ஆளுநர் தம் அரண்மனையை செசரியாவில் இருந்த புதிய தலைநகரிலோ அல்லது பழைய பரிசுத்த நகரமாகிய எருசலேமிலோ வைத்துக் கொண்டிருந்தார். ரோமச் சேவகர்களும், ரோம வரி வசூலிப்பாளர்களும் எங்கும் நிறைந்துள்ளனர். பழங்கால எபிரெய மொழியானது பள்ளிகளின் பரிசுத்த மொழியாக உள்ளது, அது நவீன இத்தாலியப் பையன் இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்வது போலக் கற்றுக் கொள்ளப்பட வேண்டும். அரமாயிக் மொழியானது அந்நாட்டவரின் பொது மொழியாக இருக்கின்றது; அதே வேளையில் கிரேக்கம் இலக்கிய மொழியாகவும், இலத்தீன் அலுவலக வட்டாரங்களின் மொழியாகவும் உள்ளன.

***2. பலஸ்தீனத்தின் ஐந்து பிரிவுகள்.***—புதிய ஏற்பாட்டு காலங்களில் பலஸ்தீனம் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது, அவைகளில் மூன்று யோர்தானுக்கு மேற்கேயும், இரண்டு யோர்தானுக்கு கிழக்கேயும் இருந்தன. மேற்கில் இருந்தவை வருமாறு,—

*அ. கலிலேயா,* வடக்கு எல்லை மாகாணமாக இருந்தது, இதில் குறிப்பிட்ட வகையில் பேசக் கூடிய, கலாச்சாரமற்ற, பிரதானமாக

யூதத்துவமிருப்பினும் பெருமளவில் புற இனத்தாரின் கூறுள்ள மக்கள் தொகை இருந்தது. கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகரங்களும் கிராமங்களும் ஏராளமாய் இருந்த போதிலும், கப்பர்நகூம் என்பது இதன் பிரதான நகராக இருந்தது.

*ஆ. யூதேயா,* இது தெற்கில், மிகவும் சுத்தமான யூதத்துவக் கலாச் சாரமும், உயர்குடிமையும் கொண்ட மக்கள் வாழ்ந்த பகுதியாகும். இதில் தாவீது மற்றும் இயேசு ஆகியோர் பிறந்தது தவிர வேறு சிறப்பெதுவு மில்லாத பெத்லகேம் இருந்தது; பெரிய ஏரோதினால் கட்டப்பட்ட ரோமத் தலை நகரான செசரியா மற்றும் பரவலாய்ச் சிதறியிருந்த இனத்தின், இனம் சார்ந்த, மதம் சார்ந்த இருதயம் போன்ற மையப்பகுதியும், அடுப்படிக்கல் போன்றதுமான எருசலேம் ஆகியவை இருந்தன.

*இ. சமாரியா,* இது மத்தியில் இருந்த பகுதியாகும், இதில் இழி பிறவி (என்று கருதப்பட்டிருந்த) இனமும் மதமும், தங்கள் யூத அயலகத்தவர் களால் வலிவுடன் வெறுக்கப்பட்ட மற்றும் அவர்களை வெறுத்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். பழங்காலத்தில் சீகேம் என்று அழைக்கப்பட்டதும், சமாரியர்களின் பண்டைக்காலக் கோயில் இருந்ததுமான சீகார் மாபெரும் ஆர்வத்திற்குரிய ஊராயிருந்தது.

யோர்தானுக்குக் கிழக்கே இருந்த மாகாணங்கள் பின்வருமாறு,—

*ஈ. பெரேயா,* இது தெற்கில் இருந்ததும், பெரும்பாலும் யூத மக்கள் வாழ்ந்திருந்ததுமான நாடாகும்.

*உ.* யோர்தானுக்குக் கிழக்கே இருந்தவைகளில் வடக்கு மாகாணம் குறிப்பிட்ட பெயரெதையும் கொண்டிருந்ததில்லை. இது சில வேளைகளில் தெக்கப்போலி (பத்து நகரங்களின் மாகாணம்) என்று அழைக்கப் படுகின்றது; ஆனால் தெக்கப்போலி என்பது தென்பகுதியை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. இது பழங்கால இராஜ்யமான பாசானுக்கு அருகில் ஏறக்குறைய இணைந்திருப்பதினால், *பாசான் மாகாணம்* என்று அழைக்கப் படலாம். இது பிலிப்புவின் கால் பங்கு அரசாட்சியைக் கொண்டிருந்தது. அங்குள்ள மக்கள் தொகையில் ஏராளமானவர்கள் இனத்தில் புறஜாதி யாராகவும், மதத்தில் புறதெய்வ வழிபாட்டாளர்களாவும் இருந்தனர். இயேசுவின் ஊழியம் இந்த ஐந்து மாகாணங்களிலும் நடந்தேறியது, ஆனால் யூதேயாவும் கலிலேயாவும் பிரதானமான அக்கறைக்குரிய மையங்களாக இருந்தன.

***3. பலஸ்தீனத்தின் ஆட்சியாளர்கள்.***—*அ. ரோமப் பேரரசர்கள்.*— பலஸ்தீனம் ரோமப் பேரரசர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த உள்ளூர் ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. கிறிஸ்துவின் காலத்தின் போது, ஆக்டேவியஸ் (அகுஸ்து) இராயன் (கி.மு. 31-கி.பி. 14), மற்றும் திபேரியு (கி.பி. 14-37) ஆகியோர் பேரரசர்களாக இருந்தனர். புதிய ஏற்பாட்டு வரலாற்றின் முக்கியமான பிந்திய பேரரசர்களாக கிலவுதியு (கி.பி. 41-54), நீரோ (கி.பி. 54-68) மற்றும் வெஸ்பாஸியன் (கி.பி. 69-79) ஆகியோர் இருந்தனர்.

*ஆ. உள்ளூர் ஆட்சியாளர்கள்.*—உள்ளூர் அரசியலானது பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்: (1) மகா ஏரோதின் அரசு. மகா ஏரோது (ரோம

*அரசிற்கு) கீழ்ப்பட்டவராய் இருந்தாலும் தம்முடைய மரணம் கி.பி. 4*[1] வரை மேலே பெயரிட்டுக் குறிப்பிடப்பட்ட ஐந்து மாகாணங்களுக்கும் அரசராக வாரிசுரிமையின் பேரில் ஆட்சி செய்தார். (2) டெட்ரார்க்கி (நான்கின் அரசு) கி.மு. 4-கி.பி. 41. ஏரோதின் அரசானது அவரது மகன்களில் மூன்று பேருக்கு சிறு பகுதிகளாய்ப் பிரித்தளிக்கப்பட்டது. அர்க்கெலாயு (மத். 2:22) யூதேயாவையும் சமாரியாவையும் பெற்றுக் கொண்டார். கி.பி. 6ல் அவர் பேரரசரின் ஆதரவின்மையை அனுபவித்தார், அவரது அரசானது பேரரசின் ஆளுநர்களின் தொடர் வரிசைக்கு கீழானது, அவர்களில் ஆறாமவராக வந்தவர் பொந்தியு பிலாத்து ஆவார். அந்திப்பா (கால் பங்கு தேசாதிபதியான ஏரோது, மத். 14:3) கலிலேயாவையும் பெரேயாவையும் பெற்றுக் கொண்டார். பிலிப்பு (லூக். 3:1) பாசான் மாகாணத்தின் கால் பங்கு தேசாதிபதியானார். லூக்கா 3:1ல் நான்காவது கால் பங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. லைசானியஸ் என்பவர் ஏரோதியாக் குடும்பத்தில் ஒருவராய் இருந்ததில்லை, மற்றும் அபிலேன் மகா ஏரோதின் ஆளுகை எல்லை களுக்குப் புறம்பே இருந்தது. (3) முதலாம் ஏரோது அகிரிப்பாவின் அரசு, கி.பி. 41-44.[2] ஏரோது அகிரிப்பா (அப். 12:1-23) மகா ஏரோதின் பேரனாக இருந்தார். பேரரசரான கலிகுல்லாவின் ஆதரவு மூலம் பஸ்தீனம் முழுவதை யும் கூடுதலாக அபிலேனையும் அவருக்குக் கீழ் ஒன்றிணைத்திருந்தது; எனவே அவர் சாலொமோனுக்குப் பிறகு வேறெந்த யூத அரசரைக் காட்டிலும் மிகப் பெரிய எல்லைகள் கொண்ட நாட்டை ஆண்டார். (4) இரண்டாம் அகிரிப்பா அரசர், கி.பி. 44-66.[3] ஏரோது அகிரிப்பா அரசரின் மரணத்தின் போது, ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அவரது மகனான இரண்டாம் ஏரோது அகிரிப்பாவுக்கு (அப். 26:2) பிலிப்பு மற்றும் லைஸானியஸ் ஆகியோரின் இரு பழைய காற்பங்குகள் தரப்பட்டன. அவைகளை அவர், கி.பி. 70ல் எருசலேமும் யூத மாநிலமும் அழிக்கப்படும் வரையிலும் ஆட்சி செய்தார். மரியாதையினிமித்தம் மட்டுமே அவர் "அகிரிப்பா அரசர்" என்று அழைக்கப்பட்டார். பலஸ்தீனத்தின் பிற மாகாணங்கள் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் போல ஆளுநர்களுக்குக் கீழாக வைக்கப்பட்டன. பேலிக்ஸ், கி.பி. 53-60 (அப். 23, 24) மற்றும் பெஸ்து, கி.பி. 60-62 (அப். 24-26) ஆகியோர் புதிய ஏற்பாட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட பிற ஆளுநர்களாய் இருந்தனர்.*

குறிப்புகள்

[1]*கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து காலத்தைக் கணக்கிடும் நமது கணக்கு முறையானது நான்காம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டிற்கு வந்தது. டினோஸியுஸ் எக்ஸீஜஸ் என்ற துறவி இந்தக் காலக் கணக்கீட்டை செய்தார். அவர் நான்காண்டுகளைத் தவற விட்டு விட்டார். அநேகமாக கிறிஸ்து பிறந்த ஒரு ஆண்டிற்குள்ளாகவே (மகா) ஏரோது மரணம் அடைந்திருக்கலாம்.* [2]*கி.பி.37ல் முதலாம் ஏரோது அகிரிப்பா பலஸ்தீனத்தின் வடகிழக்கு எல்லைப் பகுதிகளைத் தம் அரசாகப் பெற்று அரசர் என்ற பட்டத்தைப் பெற்றார். கி.பி. 39ல் கலிலேயாவும் பெரேயாவும் அவரது அரசுடன் இணைக்கப்பட்டன. கி.பி. 41ல் யூதேயாவும் சமாரியாவும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. பின்வருபவர்களைப் போன்ற சில எழுத்தாளர்கள், இவரது ஆட்சிக் காலம் கி.பி. 37-44 என்று தேதியிடுகின்றனர்: மெர்ரில்* C. *டென்னி, புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985); *இராபர்ட் கன்ரீ, புதிய ஏற்பாட்டின் ஒரு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Zondervan, 1970); *மற்றும் இராபர்ட் குரோமாக்கி, புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி* (Grand Rapids, Mich.: Baker Book House, 1974). [3]*கி.பி. 66ல் ரோமாபுரிக்கு எதிரான யூதர்களின் போர் நடந்தது, இதனால் ரோம படைத் தளபதியான தீத்து எருசலேமுக்குத் தனது படைகளுடன் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு, கி.பி. 70ல் எருசலேம் நகரை அழித்தார்.*